**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திரு மா. சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆனி திங்கள் 25–ம் நாள்
2025–ம் ஆண்டு ஜூலை மாதம் 09–ம் நாள் புதன்கிழமை
******

**<u>இடைமனு எண். 3/2023–ல் அசல் வழக்கு எண். 148/2022</u>**

பழனிவேல் .....மனுதாரர்/வாதி

...எதிர்....

1) வெங்கடேசன்
2) பழனியம்மாள் ........1,2 எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள்

3) மணிகண்டன்
4)கோமதி .......3,4 எதிர்மனுதாரர்கள்/புதிதாக சேர்க்கப்பட வேண்டிய நபர்கள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 26.06.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் R.கார்த்திக்ராஜன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் S.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், 4–ம் எதிர்மனுதாரர் இம்மனுவை பொறுத்தவரை மட்டும் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், இரு தரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**<u>உத்தரவு</u>**

3,4 எதிர்மனுதாரர்களை இவ்வழக்கின் தரப்பினராக சேர்த்து வழக்கை மேல் நடத்த அனுமதி கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை–1, விதி–10(2)–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

(i) மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் பெயரில் விளம்பல் மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை மனு முடிக்கப்பட்டதை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு இந்த 1,2 எதிர்மனுதாரர்களின் மகனான 3-ம் எதிர்மனுதாரரும், மகளான 4-ம் எதிர்மனுதாரரும் கடந்த 10-01-2023-ம் தேதியில் வழக்கு சொத்தில் அத்துமீறி ஆக்கிரமித்துவிட்டார்கள். இதனால் மேற்படி வழக்கில் 3,4 எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமித்துள்ள ஆக்கிரமிப்பை அகற்ற கோரி பிராதை திருத்தம் செய்ய வேண்டியுள்ளதால், மேற்படி 3,4 எதிர்மனுதாரர்களை இவ்வழக்கின் தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இல்லையென்றால் மனுதாரர்/வாதிக்கு ஏராள நஷ்டமும், கஷ்டமும் ஏற்படும். எனவே மேற்கண்ட காரணங்களுக்காக 3,4 எதிர்மனுதாரர்களை இவ்வழக்கின் தரப்பினராக சேர்த்து வழக்கை மேல் நடத்த உத்தரவிட கோரி மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

2. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

**இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை**

3. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்/வாதி மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. தீர்வு:**

(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/எதிர்வாதிகள்

மீது விளம்பல் மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3,4 எதிர்மனுதாரர்களை இவ்வழக்கின் தரப்பினராக சேர்த்து வழக்கை மேல் நடத்த அனுமதி அளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

(iii) மனுதாரர்/வாதி தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. இதனால் வழக்கின் விசாரணை எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதார்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு ஜூலை மாதம் 09–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்/– மா.சந்திரமோகன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**<u>பின் இணைப்பு</u>**

| | |
|---|---|
| <u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> | – இல்லை – |
| <u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | – இல்லை – |

(ஒம்/– மா.சந்திரமோகன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**நேரிய/வரைவு உத்தரவு**
இடைமனு எண்.3/2023–ல்
அசல் வழக்கு எண்.148/2022
நாள்.09.07.2025